உ

சிவமயம்



# திருமதி. கார்த்திகேசு (செல்லையா)

# சிவபாக்கியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்னை நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சிவசோதி - அருட்சோதி

அம்பலவாணர் அருள்நிழலில்

ஆனந்தத் துயில் நிகழ்த்தும்

புங்குடுதீவு

(10-ம் வட்டாரம்)

# திருமதி. கார்த்திகேசு (செல்லையா)
# சிவபாக்கியம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்னை நினைவு மலர்

## 27 - 04 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு - கொம்பனித்தெரு

## அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

பிரதமகுருவின்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

திருமதி கார்த்திகேசு சிவபாக்கியம் அவர்கள் ஆத்மசாந்தி அடைந்தார்கள் என்ற சம்பவம் கேட்டு மிக்க கவலை அடைந்தோம். இவர்கள் பல்லாண்டு காலம் இப்பாரினில் வாழ்வாங்கு வாழ்ந்து பெறுதற்கரிய குடும்பத் தலைவர், மக்கள், மருமக்கள், பேரச் செல்வங்களையெல்லாம் கண்டு களித்து இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். குறிப்பாக இவரின் அன்பு மகன் திரு. கா. தில்லைநாதன் அவர்கள் எங்கள் முருகன் மேல் அளவற்ற பக்தி பூண்டவர். ஆலயத்திருவிழா – திருப்பணிக்கெல்லாம் வாரி வாரி வழங்கிய பெருந்தகை. அதே போல் அவரது அனைத்து பிள்ளைகளும் முருகன் மேல் அளவற்ற பக்தியுடையவர்கள். அமரத்துவம் பெற்ற அம்மையாரின் ஆன்மா சாந்தியடைய நாம் நித்தம் தொழுதேற்றும் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி – ஓம் சாந்தி

**சிவானுபூதி சிவஸ்ரீ. கணேச சிவபாலக் குருக்கள்**
131, கியூ வீதி, கொழும்பு – 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
18-02-1926

மறைவு
28-03-1998

# திருமதி. கார்த்திகேசு (செல்லையா) சிவபாக்கியம் அவர்கள்

திருச்சிற்றம்பலம்

ஒருவனே போற்றி ஒப்புஇல் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

–திருவாசகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
தந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# பஞ்சபுராணப் பாடல்கள்

## திங்கட்கிழமை

## தேவாரம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண் - கொல்லி திருச்சிற்றம்பலம் 3-ம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள்

8-ம் திருமுறை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே

## திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பி காடநம்பி

பண்-சாளரபாணி 9-ம் திருமுறை

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காளியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே

## திருப்பல்லாண்டு

சேந்தனார்

பண்-பஞ்சமம் 9-ம் திருமுறை

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெயி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

சேக்கிழார் பெருமான்

12–ம் திருமுறை

தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந்தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்

* * *

# விநாயகர் நாமாவளி

சிவ சிவ கஜமுக கணநாதா
சிவ கண வந்தித குணநீதா
கெங்காதர கஜமுக வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஆனந்த ஐங்கர வந்திடுவாய்
அந்தகன் வாராமற் காத்தருள்வாய்
வா வா வா வா நற்பரனே
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக்கென்றும் அருள் புரிவாய்
ஈஸ்வரி பாலா ஏரம்பா
உமைதரு பாலா குருமணியே
உந்தன் நடைக்கலம் அடியேனே
சத்த சமுத்திர மொத்திடு மும்மத
தந்தித் தொந்தி வயிற்றோனே
ஆகுவாகன அம்பிகை வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஒரு கொம் பிரு செவி மும்மதமோ
டோரொரு நால்வாய் ஐங்கரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதின மும்மருள் ஐங்கரனே
ஆதி யனாதியோ ரட்சரமே
பார்பதி பாலா வா வா வா
பரபத மெமக்கே தா தா தா
மங்கள மருளுக ஐங்கர முதல்வா
அரிதிரு மருகா குருபர நமநம
மகாகணபதே குரு சரணம்
மனம் மகிழ்ந்துவந் தருள் சரணம்
கூகூ கணபதி கூகூ என்னக்
கூகூ என்ற குன்றே போற்றி
சரணம் சரணம் தந்தி முகா
சரவண பவனுக் குயர்துணைவா

* * *

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீகணேச ஸ்ரீ கணேச ரக்ஷமாம்

கணநாதம் கணநாதம் ஈஸ்வரபுத்ரம் கணநாதம்
கணநாதம் கணநாதம் ஈஸ்வரபுத்ரம் கணநாதம்

சித்திவிநாயக கணநாதம் முத்திப் பிராதயக் கணநாதம்
விக்ன விநாயக கணநாதம் பார்வதிபுத்ரம் கணநாதம்

மூஷிகவாகன கணநாதம் மோதகஹஸ்த கணநாதம்
வாமனரூப கணநாதம் மஹேஸ்வரபுத்ர கணநாதம்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக கணபதி கணநாதம்
விக்ந விநாயக குணநீதம்

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக கணபதி சரணம் சரணம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்)

யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
(பிள்)

அவல்கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார்
(பிள்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்)

ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவாயநம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவசிவாய நமஓம்
ஹர, ஹர, ஹர, ஹராய நமஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறு முக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம்போல சுற்றுவார்.
(பிள்)

※ ※ ※



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக நாமாவளி

வேல் முருகா மால்மருகா வா வா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா

நால் வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச்சிவை அணைக்கும் சேயேசண்முகா
செங்கதிர் வேல் தாங்கி என் தேவா சண்முகா (வேல்)

நாறு மாலைணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா (வேல்)

வீடும் நாடும் நின்திருநாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா சண்முகா
தில்லையில் ஆடும் தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியை கொண்டவா சண்முகா
(வேல்)

தொல்லையெலாம் கடந்த பதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணை செய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே நீ — வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் — வா வா முருகா
இன்பமய சோதியே நீ — வா வா முருகா
ஈசனுமை பாலகனே — வா வா முருகா
உலக நாதன் மருமகனே நீ — வா வா முருகா
ஊமைக் கருள் புரிந்தவனே — வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ — வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ — வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே — வா வா முருகா
ஆறுமுக வேலவனே — வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா — வா வா முருகா
ஓங்காரத் தத்துவமே — வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா — வா வா முருகா
ஃகில லோக நாயகனே — வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ — வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ — வா வா முருகா

⁂

குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் — தேவ
குஞ்சரியை மணம்புரிந்த „ „
சரவணையில் வந்துதித்த „ „ — சிவ
சண்முகமாய் வந்துதித்த „ „
பழனிமலை வீற்றிருக்கும் „ „ — சிவ
பக்தர்களைக் காத்தருளும் „ „
பண்டாரம் போலிருக்கும் „ „ — தேவ
பச்சை மயிலேறி வரும் „ „
ஆண்டி வேடம் பூண்டிருக்கும் „ — அவர்
அண்டி னோரை ஆதரிக்கும் „
வேலாயுதம் தரித்த „ „ — வடி
வேல்முருக நாமம்படைத்த „ „



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெண்டாயுதம் தரித்த " " பால
தெண்டபாணி பேருடைய " "
வீபூதி தரித்திருக்கும் " " அவர்
வீரமயிலேறி வரும் " "
ஆறுமுகமான பொருள் " " அவர்
ஆறுபடை வீடுடைய " "
சிவனாருக் குபதேசித்த " " சிவ
சுப்ரமண்ய பேருடைய " "
சுப்ரமண்ய பேருடைய " "
(எங்கள் குலதெய்வம்)

* * *

அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
கதிர்காம வேலனுக்கு அரஹரோ ஹரா
கந்தப்ப சுவாமிக்கு " "
திருப்பரங்கிரித் தீரனுக்கு " "
திருச்செந்தூர் வேலனுக்கு " "
திருப்பழனிச் செல்வனுக்கு " "
திருவேரகப் பாலனுக்கு " "
குன்றிலாடும் குமரனுக்கு " "
குஞ்சரி தன் கணவனுக்கு " "
குறவள்ளி காந்தனுக்கு " "
குணம் கடந்த லோலனுக்கு "
சோலை மலைக் கிழவனுக்கு "
சொகுசுக்கார முருகனுக்கு " "
சிவசக்தி வடிவனுக்கு " "
சிங்கார வேலனுக்கு " "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்கார நாசருக்கு அரஹரோ ஹரா
அன்பர்களின் நேயருக்கு ,, ,,
அரஹரோ ஹரா சுவாமி ,, ,,
ஓங்காரத் தத்துவர்க்கு ,, ,,
ஓம் சக்தி தந்தவர்க்கு ,, ,,
அரஹரோ ஹரா சுவாமி ,, ,,
அரஹரோ ஹரா சுவாமி ,, ,,

* * *

பஜனை செய்வோம் வாருமே பஜனை செய்வோம் வாருமே
பக்தியுடன் முருகநாம ,, ,, ,,
சிந்தை தெளிந்தின்ப முற ,, ,, ,,
சேவற் கொடி வேலவனை ,, ,, ,,
பந்தவினை போக்கிடவே ,, ,, ,,
பாலசுப்ரமணியனையே ,, ,, ,,
வஞ்ச நெஞ்சை வதைத்திடவே ,, ,, ,,
வள்ளி மணவாளனையே ,, ,, ,,
அஞ்சும் நெஞ்சை அழித்திடவே ,, ,, ,,
ஆறுமுக நாதனையே ,, ,, ,,
கந்தனென்றும் கடம்பனென்றும் ,, ,, ,,
காமப் பேயை அடக்கிடவே ,, ,, ,,
தாமதப் பேயை நசுக்கிடவே ,, ,, ,,
தந்தைக்கு உபதேசித் தோனை ,, ,, ,,
மாந்தர் ஒன்று கூடிவாழ ,, ,, ,,
மால் மருகன் புகழைப் பாடி ,, ,, ,,
சாந்தம் என்றும் பெருகிடவே ,, ,, ,,
சந்ததமும் சண்முகனை ,, ,, ,,
(பஜனை செய்வோம்)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ சிவ சண்முகனே
சிவபதந் தந்தருள் சண்முகனே

அரகர அரகர சண்முகனே
ஆனந்தத் தந்தருள் சண்முகனே

எந்தனுக்கே வழி தந்தருளாய்
எங்கும் நிறைந்த தயா பரனே

எங்கும் நிறைந்த தயாபரனே
எந்தன் இடர் வினை தீர்த்தருளே

தீரா வினைகளைத் தீர்ப்பவரே
திருவருளே தந்து காப்பவரே

காப்பாய் இதுநல்ல சமயமையா
கந்தா கதிர்வடி வேலவனே

வேலவனே வேலவனே
வேலவனே வடிவேலவனே

வேல்முருகா மால் மருகா
வேறில்லையே கதி நீயருளாய்

கந்தா சுந்தர முருகேசா
கார்த்திகேயா குமரேசா

முருகர் நாமமே ஆனந்தம்
அதை உண்பவர்க்கே பிரமானந்தம்

தணிகா சலபதியே தெய்வம்
சாந்தினி யவன்பணியே தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகத மயில் மிசை வருகந்தா
அரகர சிவசிவ சம்பந்தா

மரகத மயில் மிசை வருநாதா
வள்ளி தெய்வானை மணவாளா

மரகத மயின் மிசை வரவேணும்
கந்த மனதுக்கிசைந்த வரம் தரவேணும்

சரணம் சரணம் சண்முகனே
சரவண பவனே சரணம் சரணம்

* * *

சரவண பவனே பரதெய்வம்
தரணியில் அவனே மெய்த்தெய்வம்
பக்தற் கிரங்கும் விஸ்வாசன்
பழனிப் பதி வாழ் முருகேசன்
முருகன் திருவடி தரிசனமே
முக்திக் கொருதுணை அறிமனமே
சரவண பவகுக என வருமே
சத்திய ஞானத் திருவுளமே
சண்முக சுந்தர வேலவனே
சங்கரி ஈன்றருள் பாலகனே
பவப்பிணி ஒழித்திடும் மருந்துண்டு
பன்னிரு திருக்கரன் திருத்தொண்டு
கதிர் வடிவேலவன் திருவடியே
கதி தரும் துணை அதை நீ பிடியே
ஆறுமுகன் திருவடி மலர் மறவோம்
அவனியிலே இனிநாம் பிறவோம்
கந்தனை அன்பினை செய்யுங்கள்
சிந்தனை அவனடி வையுங்கள்
வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்யப் பிறவியைத் தாண்டுங்கள்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேயா கலியுக வரதா கந்தா முருகா
கதிர்வடி வேலா (கார்த்தி)

தோத்திரஞ் செய்துணை துதித் தோம் காவாய்
தூய்மையும் அன்பும் துலங்கிடச் செய்வாய் (கார்த்தி)

சாத்திரக் கோத்திரச் சண்டையைத் தீர்ப்பாய்
சன்மார்க்க மொன்றே சகமிசைக் காப்பாய் (கார்த்தி)

பாரில் உனையே பணிந்திட வைப்பாய்
பக்தர்கள் கூட்டம் பரவிடப் பணிப்பாய் (கார்த்தி)

சீருடன் ஆத்ம சித்தியும் தருவாய்
பேரும் புகழும் பிணியது காப்பாய் (கார்த்தி)

ஆர்வக் கனலை அடியார்க் கீவாய்
அவனியில் அமைதி ஆண்டிட அருள்வாய் (கார்த்தி)

கார் மழை போல்நின் கருணையைப் பொழிவாய்
காங்கேயா ஷண்முகா கதிர்காமத் தேவே! (கார்த்தி)

※ ※ ※

உன்னுடைய வேலொன்றே உறுதுணையாய் வருகுதையா
கும்மிருட்டுப் பாதையிலும் பேரொளியாய்த் தெரியுதையா
என்னுடைய ஆட்டமெல்லாம் நீ அமைத்த மேடையிலே
இசைவதும் அமைவதும் நின்கடைக்கண் சாடையிலே

வேலவனே வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றிவடி வேலவனே பாலகனே வேல்முருகா
வேலைக் கையில் ஏந்தியாடும் வேலவனே வேல்முருகா
வினைகளெல்லாம் போக்கிவிடும் வேலவனே வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை மயில் வாகனனே பாலகனே வேல்முருகா
அச்சந்தீர்த்து எமையாளும் ஆண்டவனே வேல்முருகா
கண்ணிரண்டும் உன்வடிவே காணவேண்டும் வேல்முருகா
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும் வேல்முருகா

பண்ணமைக்கும் நாவுனையே பாடவேண்டும் வேல்முருகா
எண்ணமெல்லாம் உன்நினைவே யாகவேண்டும் வேல்முருகா
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும் வேல்முருகா
தொல்லை இந்த வாழ்வை விட்டு ஓடவேண்டும் வேல்முருகா

* * *

கந்தா கடம்பா கார்த்திகேயா
கலியுக வரதா கதிர்காமா (கந்தா)

தேவர்கள் துயர்தனை நீக்கிடவே
திரு அவதாரம் செய்தாயே
சங்கரன் மைந்தனாய் வந்துதித்தே
சரவண பொய்கையில் வாழ்ந்தாயே (கந்தா)

சூரபத்மனை ஸம்ஹரித்த
வீரா தீரா வெற்றிவேலா
வள்ளிப் பெண்ணைத் தினைப்புனத்தில்
கொள்ளை கொண்ட கள்வனானாய் (கந்தா)

அருண கிரியுன் சரணெனவே
கருணை யுடனே ஆண்டுவந்தாய்
நக்கீ ரனுக்கு அருள்பரிந்தே
பக்தி யோடுனைப் பாடவைத்தாய் (கந்தா)

முருகா முருகா என்றிடவே
முருக னாய்வந் தருள்புரிவாய்
கதிர்கா மந்தனில் எழுந்தருளி
காந்தம் போலே கவருகின்றாய் (கந்தா)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசர் நாமாவளி

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மய தேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக வமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரசுர சிவ சிவ ஆடிய பாதா
கருணாநிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
இக்கரை கடந்திடில்லக் கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராஜப் புத்தமுதே
ஐயர் திருச்சபை யாடகனே
ஆடுத லானந்த நாடகமே
அம்பலவா சிவா மாதேவா
அம்பலவா இங்கு வா வா வா
நடராச னெல்லார்க்கு நல்லவனே
நல்ல தெலாஞ் செய வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போனகங் கொண்டோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை யாட்கொள வா வா வா
நடனசிகாமணி நவமணியே
திடனகமாமணி சிவமணியே
நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பல பொன்மணியே
உவட்டாது தித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே
நடராச வள்ளலை நாடுதலே
நந் தொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட் பெருஞ்சோதி யெண்ணாண்டவனே
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு
அம்பல வாணனை நாடினனே
அவனடியாரொடும் கூடினனே
தம்பத மாபுகழ் பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே
நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே
நடராஜர் த[illegible] நட[illegible] நன்[illegible]டமே
நடம் புரிகின்றது மென்னிடமே
சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளையே
திரு வாள னானவன் சீர்ப் பிள்ளையே
அம்பல வாணர்தம் மடியவரே
அருளர சாள்மணி முடியவரே

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் செய்யும் மூடர்களே வாரும் வாரும்
நாளை காலனுக்கு ஆளாகப் போறீர் பாரும் பாரும்
பொல்லாத யமன் அவன் விடமாட்டான்
சாம்பசிவ பக்தன் என்றால் தொடமாட்டான்
காலன் வந்தால் பொல்லாதவன் விட மாட்டான்
கால கால பக்தன் என்றால் தொடமாட்டான்
சிவ சிவ என்ற ஒரு நாமம் சொல்லடா
கெட்ட பாமரனே உனக்கது பாரமல்லடா.

⁂ ⁂ ⁂

## சக்தி நாமவளி

சுத்த சத்தி ஓம் சிவம் சுத்த சக்தி ஓம்சிவம்
சுத்த சத்தி ஓம் சிவம் சுத்த சத்தி ஓம்சிவம்
துஸ்ட எண்ணம் தூர ஓட்டும் தூய சத்தியே
துயர் பாவம் இடர்களையும் துரிய சத்தியே
நஸ்ட லாப எண்ணம் போக்கும் நல்ல சத்தியே
நம்பியுன்னைக் கைதொழுதோம் நல்ல சத்தியே
தாயிலாது சேயிலை தரையிலாது பயிரிலை
நீயலாது உயிரிலை நிகர் இலாத தெய்வமே (சுத்த சத்தி)

சுத்தமான நெஞ்சிலே தூங்குகின்ற ஜோதியே
அத்தனே என் அம்மையே அரும்பெரும் துணைவனே

நெக்கு நெக்கு உருகியே நினைந்திடும் புனிதரின்
உட்குவிந்த தியானத்தில் ஒளிருகின்ற தெய்வமே

புத்தியில் அறிவெனப் புலன்களில் உணர்வென
எத்துயிர்க்கும் உயிரெனா உலவுகின்ற தெய்வமே

வானிலும் கடலிலும் மழையிலும் கதிரிலும்
கானிலும் மலையிலும் கலந்து நிற்கும் தெய்வமே

ஊற்றிலும் சுனையிலும் உலகிலே வளஞ் செயும்
ஆற்றிலும் கலந்து வாழும் அன்புமிக்க தெய்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறி புலன் கரணமும் பொலிவுற நிலவிடும்
அறிவும் ஈந்தருளுவாய் ஆன்மநேயத் தெய்வமே

வந்து செல்லும் வாழ்விலே மாசில்லாத நேசமும்
நொந்தவர்க்குதவிடும் நோன்பும் ஈர்ந்தருளுவாய்

என்றும் எங்கும் உன்னையே யாது மாகக் கண்டுயிர்
நன்று செய்யும் சக்தியை நல்குவாய் இறைவனே

கலகமான உலகிலே கருணையான ஆட்சியே
நிலவ நாட்டும் ஆற்றலை நேயருக்கு அருளுவாய்

கள்ளமற்ற உள்ளமும் கட்டிலில்லாத வீரமும்
தெள்ளினிய சித்தமும் தியான வாழ்வும் ஈகுவாய்

தூய்மையான நெஞ்சமும் தொண்டு செய்யும் ஆர்வமும்
வாய்மையான வண்மையும் வரம் எனக்கு உதவுவாய்

கண் கொடுத்த தெய்வமே கதி கொடுத்த தெய்வமே
பண் கொடுத்த தெய்வமே பரமஞான ஜோதியே

உடல் உறுதி ஈகுவாய் உள்ளுறுதி ஈகுவாய்
மடமை வறுமை அச்சமற்ற மல்கு செல்வம் ஈகுவாய்

சுயநலம் பொறாமையும் சூதும்வாதும் இன்றியே
தயவுடன் உயர்க்குலம் தழைத்திட அருள்குவாய்

எத்திசை உலகமும் இதயமான கோவிலில்
சுத்த யோக சித்தியால் ஒத்து வாழ நீ அருள்

போற்றி போற்றி நின் அருள் போற்றி போற்றி நின் ஒளி
போற்றி போற்றி நின்புகழ் புனிதமான தெய்வமே

(சுத்த சத்தி)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்த சக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சுத்த)

வேத சாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்த)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்திர யந்த்ர தந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம் (சுத்த)

யோகயோக த்யாக சக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோக்ஷ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சுத்த)

துஷ்டசத்துரு நாசசக்தி துர்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபவ தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சக்தி ஓம்சிவம் (சுத்த)

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,

ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)
நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனையனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

❋ ❋ ❋

## மங்களம்

எங்கணும் நிறைந்திலங்கு ஐங்கரர்க்கு மங்களம்
பங்கஜ மலரின் மேவும் பார்வதிக்கு மங்களம்
பார்வதி சமேத பக்த ரட்சகர்க்கு மங்களம்
பரமேஸ்வரி சமேத பரமேஸ்வரர்க்கு மங்களம்
அங்கயற்கண் அம்மை மீனா அம்பிகைக்கு மங்களம்
ஆலகாலத்தை உண்ட ஐயனுக்கு மங்களம்
முத்தமிழைக் கற்றுணர்ந்த உத்தமர்க்கு மங்களம்
கலியுகத்து மெய்ஞ்ஞானக் கந்தனுக்கு மங்களம்
சீர்காழி நகர்பிறந்த சம்பந்தர்க்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கும் ஜெய ஜெய மங்களம்
திருநாவ லூர்பிறந்த சுந்தரர்க்கும் மங்களம்
திருவாத வூரருக்கும் ஜெய ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம் மங்களம் சுப மங்களம்

திருச்சிற்றம்பலம்

தொகுப்பு - மணிமாஸ்டர்

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை"

"தாயில் சிறந்தொரு கோவிலுமில்லை" தாய் தன் பிள்ளைகளுக்கென்று தன்னை அர்ப்பணிக்கும் அரும் பெரும் பொக்கிஷம். எமது அன்னை எமக்கு உணவு தந்து உறையுள் தந்து உவந்து காத்த அருள் ஊற்று. நன்மை செய்து நல்லோளி தந்து நாடு வாழ்த்த வைத்தவர். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்று எண்ணும் போது எம்தாயை மீண்டும் எப்போது காண்போம்? முன்பின் தெரியாத எங்களுக்கு ஏன் இப்படித் தியாகம் செய்தார். மக்கள் என்ற சொல்லில் ஏன் கட்டுண்டு மாண்பு வளர்த்தார். உற்றார் உறவினர் ஊரவர் நண்பர் என்ற எல்லோரையும் எங்களுக்கு எப்படியான உயர்ந்த பண்புடன் உணரவைத்தார். அறுசுவை தந்தார். அறம் பல செய்தார். ஆண்டவன் ஒருவனை அறிய வைத்தார். இன்முகங் காட்டினார். இன்சொல் இயம்பினார். இரு கண்ணாக இலங்கினார் அன்னை. தான் நோவுற்றும் தன் மக்களுக்குத் தண்ணளி செய்த தரும உருவம். வற்றா ஊற்றாய் வாழ்வு வளம்பெற வகுத்து வைத்த வரப்பிரசாதம். "நேற்று இருந்தார் இன்று இல்லை" என்று போதித்து, இறைவனை வணங்க இருநிதி தந்த அன்புத் தெய்வம்.

உலக வாழ்க்கையில் ஒருமுறை மனிதராய் அறிமுகம் செய்ய எத்தனை தவம் செய்தோமோ என்று செப்பி எந்தப் பொழுதும் எம்மான் கழலை எண்ண வைத்தார். எம் அன்னை தயைக்கு அறிமுகம் செய்ய அன்றும் இன்றும் உவமைகள் இல்லை.

இறைவனது படைப்புக்கள் அனைத்தும் உயர்திணை அஃறிணையாகிய இரு திணைகளிலும் அடங்கியனவே. இப் படைப்புக்களில் உயர்ந்தது தாய்க்குலம். உயர்திணையாயுள்ள தாயானவள் தனது மக்களில் காட்டும் அளப்பரிய அன்பும் பாரிய பரிவும் எம்மாதிரியானதோ, அதேபோன்று அஃறிணையாய் உள்ள தாயானவள், தங்களது குட்டிகள், குஞ்சுகள் மீது சொரியும் அன்பும் பரிவும் ஆதரவும் ஒரே மாதிரியானது என்பதனை யாண்டும் கண்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுகி அம்மையார் தமது வாழ்வுப் பயணத்தை முடித்து வானுலகெய்திய ஞான்று, அன்னாரின் பிரிவாற்றாமையால்!

"**அன்னை தயையும் அடியாள் பணியும்**" என்று முப்பாலுரைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகை கண்ணீர்மல்கக் கூறுகின்றார். வாசுகி அம்மையார் தமது நாயகன் பால் செலுத்திய அன்பு எத்தன்மையது? அன்னையானவள் தனது சேய்க்குக் காட்டும் அன்பை ஒத்துள்ளதென எடுத்து உலகுக்குக் காட்டியுள்ளார்.

"காதற்ற ஊசியும் கூடவாராது
காண் கடைவழிக்கே".

என்ற மெய்வாசகத்தின் உண்மையைத் தெளிந்த பட்டினத்தடிகள் துறவியானார். இவர் துறவறம் பூண்டும் தம் அருமை அன்னையாருக்கு ஆற்றவேண்டிய இறுதிக்கடனை முடிப்பான் வேண்டி காவிரிப்பூம் பட்டினத்திலேயே காத்திருந்து,

"குடியிருந்த வீட்டுக்குக்
கொள்ளிவைக்க வேண்டும்"

என்று கூறித்திருந்ததும், அவ்வாறவரின் அருமை அன்னை அரனடி அடைந்ததும்,

"அன்னை யிட்ட தீ அடி வயிற்றிலே"

என்று பாடியதும், அன்னையாருக்கு ஈமச் சடங்குகள் செய்யும் போதெல்லாம் அழுது புலம்பியதும். இன்றும் என்றும் நினையுந்தொறும் உள்ளத்தை உருக்குவன. இதனால் தாயன்பு தலையாயது போதரும் இவ்வுலகில் நடமாடும் அத்தனையும் தாயிடமிருந்து வந்தனவே. தாயின்றேல் தரணியில்லை தரணி தளைப்பதும் தாயினாலன்றோ? இதனாலன்றோ

"தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை"
என்று போற்றப்படுகின்றாள்.

இறைபணிச் செம்மல்
**க. பாலசுப்பிரமணியம் J.P**
(மணிமாஸ்டர்)

முன்னாள் அறங்காவலர்
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

இந்நாள் அறங்காவலர்
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எம்மையெல்லாம் ஆளாக்கி
இந்நன்நிலைக்கு கொண்டு வந்த
எம் அன்புத் தாயாரின் மரணச் சடங்கிலும்,
அந்தியேட்டி வைபவத்திலும் கலந்து
எமக்கு ஆறுதலும், அனுதாபமும் தெரிவித்த
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்
எம் என்றும் மறவா பசுமையான நன்றியறிவித்தலை
பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிவுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கா. தில்லைநாதன் (மகன்)
விக்டோரியா பேக்கரி &
குறோசெறிஸ் லிமிட்டட்,
148, ஜஸ்ரிஸ் அக்பர் மாவத்தை,
கொழும்பு - 02.
தொலைபேசி - 440695

New Rajan Print, Colombo - 2. Tel.434092

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org